REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 11உ திங்கள் (26—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 12உ செவ்வாய் (27—12—55) [இதழ் 166

தாமதமாக அலுவலகம் வந்த உயர்தர அதிகாரிகள்!

லாகூர், டிச. 25—

மேற்குப் பாகிஸ்தான் சர்க்கார் அலுவலகத்திற்குத் திடீரென வருகை தந்த முதன் மந்திரி டாக்டர் கான் சாகிப், பல உயர்தர அதிகாரிகள் அலுவலகத்திற்குக் குறித்த நேரத்தில்—அதாவது காலை 9 மணிக்கு வராதிருந்ததைக் கண்டு அவர்களெல்லோரும் 'காலந் தாழ்ந்து அலுவலகம் வந்ததாக'ப் 'பதிவு' செய்தாராம்!

பண்டித நேருவின் எதேச்சாதிகாரம் வெட்ட வெளிச்சமாகிறது

'ஜனநாயகத்திற்கு ஒவ்வாதது— சோஷலிசத்திற்கு முரண்பட்டது'!

சாதிமுறைக் கேடுகள் பற்றி நேரு

"குழப்பமுண்டாக்கும் போக்குகள், இந்தியாவின் 'ஒற்றுமை', நம்மைப் பிரித்து வைக்கும் தடைகள், சுவர்கள்—இவற்றை நாம் உடைத்து நொறுக்குதல், இவை பற்றியெல்லாம் நான் பேசிக்கொண்டு வருகிறேன்.

"இந்துக்களிடையே நான் பேசும்போது குறிப்பாக ஒன்றை—கடந்த காலத்தில் இந்தியாவைப் பலவீனப்படுத்திய ஒன்றை—நான் நினைவூட்ட விரும்புகிறேன்; அதுதான் நமது சாதி முறை நம்மிடத்தில் ஏராளமான சாதிகள் இருக்கின்றன. இவற்றை நாம் எவ்வளவு சிக்கிரம் விட்டொழிக்கிறோமோ அவ்வளவு நல்லது.

"நாம் இந்தியாவில் ஜனநாயகம் வேண்டுமென்கிறோம். நமக்கு ஒரு ஜனநாயக அரசியல் சட்டமும் இருக்கிறது. ஆனால், பொருளாதார ஏற்றத் தாழ்வு அல்லது சாதீய ஏற்றத் தாழ்வு போன்ற ஏற்றத் தாழ்வுகளிலிருந்தால் ஜனநாயகம் எப்படி இயங்க முடியும்?

"ஜனநாயகமும் சாதி முறையும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவாகும். அதேபோலத்தான், நாம், சோஷலிசம் அல்லது 'சோஷலிச மாதிரி சமூக அமைப்பு' வேண்டும் என்கிறோம் ஆனால் சோஷலிசமும், சாதி முறையும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதனவாகும்,"

—என்று பண்டித நேரு பாலக்காட்டில் நடைபெற்றப் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'மண்டல மன்றங்கள்' அமைந்தேதீருமாம்

மத்திய சர்க்காரை மாநிலங்கள் எதிர்க்காமலிருக்க ஏற்பாடு வேண்டுமாம்

199 கருணை மனுக்களாம்!

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளிடமிருந்து 1955 டிசம்பர் 15-ந் தேதி வரையில் மொத்தம் 199 கருணை மனுக்கள் வந்தன என்றும், அவைகளில் 45 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் பண்டிதபந்த், மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்தும், மேற்குப் பாகிஸ்தானிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்குப் புனர் வாழ்விப்பு நிதி திர்வாகம் 1955 அக்டோபர் கடைசி வரையில் மொத்தம் ரூ. 9 85 87,000 கடன் தொகைகள் வழங்கியிருக்கிறது.

ஒரே மாநிலத்தில் இரு மொழிகள் ஆட்சி செலுத்த முடியும் என்கிறார்

'இந்திய ஒற்றுமை'யைக் காக்க வேண்டுமென ஓலமிடுகிறார் பிரதமர்

"உத்திரப் பிரதேசம் மிகப் பெரிய மாநிலமாயிருக்கிறது என்றும், தென்னிந்தியாவுடன் ஒப்பிடும்போது வடநாட்டிற்குச் சாதக பலம் அதிகம் கிடைக்கிறது என்றும் புகார்கள் கூறப்படுகின்றன.

"இது ஓரளவுக்கு உண்மையாயிருக்கலாம்; தென்னாட்டைவிட வடநாடு பெரும்பகுதிகளைக் கொண்டதுதான்; ஆனால் செயல்படுவதில் இது உண்மையாயிருக்கக்கூடாது; தென்னாட்டிலும் பெரிய மாநிலங்கள் இருந்திருக்குமானால் இது நிகழ்ந்திருக்காது. துரதிருஷ்டவசமாக, வடநாட்டில் பெரிய மாநிலங்களும், தென்னாட்டில் சிறு மாநிலங்களுமாக அமைந்துவிட்டன.

"எனவே, மண்டல மன்றங்களை அமைப்பதின்மூலம் வடநாடு—தென்னாடு என்ற ஏற்றத் தாழ்வுகளை ஓரளவு சரிக்கட்டி, சற்றுச் சமநிலையையும் ஏற்படுத்த முடியும்.

"இந்த மண்டல மன்றங்களில் மத்திய சர்க்காரின் பிரதிநிதிகளும் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன்; ஏனெனில், அவை மத்திய சர்க்காருடன் தொடர்புகொண்டனவையாயிருக்க வேண்டும் என்பதுமன்னியில், சில மாநிலங்கள் ஒன்றுகூடி, மத்திய சர்க்காருக்கு எதிராகப் 'புரட்சி' செய்யாது தடுப்பதற்காகவும்தான்,"

—என்று, பிரதமர் நேரு, மக்கள் சபையில் வெளியிட்ட மண்டல ஆலோசனை மன்றங்கள் அமைப்பது என்ற கோரிக்கை குறித்து, மாநிலங்கள் சபையில் விளக்கம் தந்த பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"நான் மொழிக்குத் தரும் மிக அதிகமான முக்கியத்துவம் பற்றிப் பேசும்போது, மொழியின் முக்கியத்துவத்திற்கும், மொழி வெறிக்கும் உள்ள வேறுபாட்டினை உணர வேண்டுகிறேன்

"ஒரு மொழி இன்னொரு மொழியை அடக்கி ஆள முற்படாத அளவுக்கு மொழி வளர்ச்சிக்கு ஊக்கம் தரவேண்டியது தான். பல மக்களும், ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்றாக வேண்டும்.

"ஒரு மனிதன்—நல்ல கல்வி பெற்றவன், பண்பாடுடையவன், விஞ்ஞானத் தொழில் நுணுக்கத் துறைகளில் விரிவான அறிவு பெற்றவன் என்று கூறப்படுவதற்கு இரண்டு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை அவன் கற்றிருக்கவேண்டும் இந்த நாடு வளரும்போது வெளிநாட்டு மொழிகளை—குறிப்பாக ஆங்கிலத்தை மறந்துவிட்டால், நாம் இந்தி, வங்காளி, தமிழ் அல்லது தெலுங்கு இவற்றில் எத்தனை வளமான அறிவு பெற்றிருப்பினும், நாம் இரண்டாந்தர மாணவர்களாகக் கருதப்படுவோம்.

"ஏராளமான கலைகளை அறிவுச் செல்வங்கள் வெளிநாட்டு மொழிகளில் மிகுந்திருக்கின்றன; எனவே, உண்மையில் ஒருவன் கல்விமான் என்று கருதப்படுவதற்கு இரண்டு அல்லது மூன்று இந்திய மொழிகளுடன், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யா, சீனு, ஜெர்மன் இவற்றில் ஏதாவது ஒரு மொழியையும் கற்றிருக்கவேண்டும்.

"ஒரு மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் இருக்குமானால், அந்த மாநிலத்தின் நிர்வாகத்தை இரண்டு மொழிகளில் நடத்துவதில் கஷ்டமேதும் இருக்கமுடியும் என்று நான் கருதவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

ஈ. வெ. கி. சம்பத்

வடநாட்டில் உள்ள அணைக் கட்டுத் திட்டங்களையும், டில்லியில் நடைபெறும் கண்காட்சியையும் பார்வையிடும் பொருட்டு காரின் மூலம் சுற்றுப்பயண நிகழ்ச்சியை மேற்கொண்ட தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 23-12-55-இல் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த கட்டாக் நகர் வந்து சேர்ந்தார்.

அவர் 27 அல்லது 28-12-55-இல் சென்னை வந்து சேர்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறார்.

'சாதிப்பட்டங்களை ஒழிக்க சட்டம் வேண்டும்'

'சாதிப் பாகுபாடுகளால்தான் நீதியும், நேர்மையும் அழிந்தன'

டாக்டர் பட்டாபி சீதாராமையா கருத்து

ஐதராபாத், டிச. 24—

"சாதிப் பட்டங்கள் நீடிப்பதை நாம் ஆதரிக்கக் கூடாது. ஒருவரை அவரது சாதிப் பட்டத்தால் அழைப்பது அழகோ, சீரானதோ அல்ல. பெயர்களுக்குப் பின் சாதிப் பட்டங்களை ஒட்டிக் கொள்வதைத் தடுக்கச் சட்டங்கள் வேண்டும்,"

—என்று, டாக்டர் பட்டாபி சீதாராமையா குறிப்பிட்டிருக்கிறார்.

உஸ்மானியா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசிய மத்திய பிரதேச கவர்னரான அவர், மேலும் குறிப்பிட்டதாவது:—

"தென்னிந்தியாவில் ஒரு இராமசாமி—அய்யர் அல்லது அய்யங்கார், முதலியார் அல்லது பிள்ளை, நாயுடு அல்லது நாயக்கர், செட்டி அல்லது சௌத்ரி, வர்மா அல்லது சர்மா என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த ஒவ்வொரு பட்டமும் சாதிப் பெயரைக் குறிக்கிறது. இதைப் போலவே மலபாரில் ஒரு இராமன்—மேனனாகவோ, நாயகராகவோ, நம்பியாராகவோ, பிள்ளையாகவோ அழைக்கப்படும் நிலை இருக்கிறது

"நமக்கு, வடநாட்டில் வழங்கும் சாதிப் பட்டங்கள் பரிச்சயமானவை அல்ல; ஆனால், சிறிது கவனித்தால் உண்மை தெரிய வருகிறது.

"கன் இறக்குவோர் அங்கு, கலால், சாகு, ஷியோரி, ஜயஸ்வால்ஸ், ரெய்ஸ், கால்காரி, மஹெளரி என்று அழைக்கப்படுகின்றனர்.

"கயாஸ்தர்கள் — ஸ்ரீவத்சா, சின்ஹா, சாக்சேனா, மாதூர், பட்னாயர் என்று அழைக்கப்படுகின்றனர்.

"வைசியர்கள்—அகர்வாலா, மகேஸ்வரி, குப்தா, கார்க், கோயால், மில்லால், பைசல், ஜிந்தால், தோயால் என்று அழைக்கப்படுகின்றனர்.

"க்ஷத்திரியர்கள் — க்ஷத்ரேபால், சோப்ரா, சாவாலா, மல்ஹோத்ரா, கிருலா என்று அழைக்கப்படுகின்றனர்.

"இவையெல்லாம் வடநாட்டுச் சாதிப்பட்டங்கள்!

"வளர்ந்துகொண்டிருக்கும் தலைமுறையினரான பட்டதாரிகளாயுள்ள நீங்கள், சாதீயத்திற்கு எதிராகப் பிரதமர் நேரு தொடுத்திருக்கும் போராட்டத்தை ஆதரவுகூற வேண்டும்.

"ஒருவரை அவரது சாதிப் பெயரால் அழைப்பதே பொதுவான தோர் குணக் குறைவாகும். எனவே, நீங்கள் எல்லாம் சாதிப் பட்டங்களை விட்டொழிக்க வேண்டும்.

"சாதிப் பாகுபாடுகள் வளர்த்த குறுகிய நோக்கத்தினல்—நீதி, நியாயம், நேர்மை, ஒழுங்கு முதலிய உணர்வுகள் அழிந்துவிட்டன என்பதையும் மாணவர்கள் உணர்ந்தாகவேண்டும்."

'சாதிப்பாகுபாடுகள் நீடிப்பது கண்டு நாம் வெட்கப்பட வேண்டும்'!

இந்து மத சிலாக்கியம் குறித்துப் பேசும் டாக்டர் இராதாகிருஷ்ணன் கருத்து

திருவனந்தபுரம், டிச 25—

"மதத்தின் பெயரால் சாதி, வகுப்புப் பாகுபாடுகளை நீடிக்கச் செய்வதற்கு நாமெல்லாம் வெட்கப்படவேண்டும்; மனிதர்களிடையே ஒரே ஒரு பிரிவுதான் இருக்கமுடியும்; அதுதான், நல்லோர்—தீயோர் என்ற வேறுபாடு"

—என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் கேரள இந்து 'மிஷன்' சார்பாக நடைபெற்ற இந்து மத மாநாட்டில் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் சொன்னார்:—

"இந்துமதத்தின் அத்தியாவசியங்களான அன்பையும், அகிம்சையையும் கைக்கொள்ள வேண்டுவதுதான் இப்போது தேவைப்படுகிறது; 'கூடி வாழ்தல்' என்ற கொள்கை, சரித்திரக் காலத் துவக்கத்திலிருந்து வளர்ந்துவரும் ஒன்றாகும். நாம் எப்போதும் மக்கள் தங்கள் மதங்களை மாற்றிக்கொண்டு திரியுமாறு கூறியதில்லை அது நாட்டின் பாரம்பரியமாக இருந்து வருகிறது. உலகத்தின் க்ஷேம நலத்துக்குப் பாடுபடவேண்டியதும், கடவுளை உணர்வதற்கு உலக மக்களுக்கு உதவவேண்டியதும் நம் கடமையாகும்.

"இந்த நாட்டில், மதம், ஒரு உண்மையான காரியத்திற்காகப் பயன்பட்டு வந்திருக்கிறது.

"இந்த நாட்டு மதம், ஆண்டவனை அடைவதற்கும், மனிதர்களின் நலனுக்காகவுமே எல்லோரும் செயல்பட வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டதாகும்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26–12–'55 திங்கள்

ஆதிக்க மண்டலங்கள்

மாகாண புனரமைப்புக் குழுவின் முடிவுகளும், காங்கிரஸ் மேலிடத்தின் மறு முடிவுகளும் பம்பாயிலும், பஞ்சாபிலும் பெரும் புயலைக் கிளப்பிவிட்டிருக்கின்றன. அப்புயலின் வேகம் சென்ற சில நாட்களாக மக்கள் சபையில் பிரதிபலித்துக் கொண்டும் இருக்கிறது.

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்பதைத்தான் ஒவ்வொரு மொழியினரும் விழைகின்றனர். அதைப் பற்றிக் கொண்டுதான் அவர்கள் முயற்சியும் இருக்கிறது.

மொழி அடிப்படையில் மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமெனக் கோரும் எந்த ஒரு மொழியினரும், இந்தியாவிலிருந்துத் தத்தம் பகுதிகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமெனக் கனவிலும் கருதாதவர்களேயாவர்.

கோருவதைப் பெற தாங்கள் பேசும் பேச்சு, அத்தகைய தவறான கருத்தைக் கொடுத்து விடுமோ என்பதற்காகவே, இந்திய ஐக்கியத்தின் இன்றியமையாமையைக் குறித்தும், அதில் தங்களுக்குள்ள ஆழ்ந்த பற்றுதலைக் குறித்தும், ஆரம்பத்திலேயே தோற்றுவாய் கூறியும் விடுகின்றனர். அதன் பின்னரே தங்கள் கோரிக்கைக்கான அகச்சான்று, புறச்சான்றுகளை எடுத்துக்காட்ட முனைகின்றனர்.

உண்மை நிலை இவ்வாறு இருந்தபோதிலும், அவர்கள் கோரும் மொழிவழி கோரிக்கையிலும், அதற்காக அவர்கள் குறிப்பிடும் நியாயங்களிலும் இந்தியாவின் ஐக்கியத்திற்கு உலைவைக்கும் பிரிவினை நெடி அடிப்பதாக இந்தியப் பிரதமர் நேரு உள்ளிட்ட காங்கிரஸ் மேலிடத்தார் கருதுகின்றனர். அதை வெளிப்படையாகக் கூறிடவும் செய்கின்றனர்.

இந்நிலையில், இயல்பாகவே மொழி அடிப்படையில் அமைந்துள்ள உத்திர பிரதேசம் மொழிவழி கோரிக்கைகூடாது எனக் கூறுகிறது. இந்திய ஒற்றுமையைத் துண்டாடும் கூர்வாள், மொழி கோரிக்கையில் மறைந்து கிடப்பதாக உத்திர பிரதேசம் ஒப்பாரியும் வைக்கிறது.

உத்திர பிரதேச மொழியும் இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியும் இந்தி மொழியாகவே இருந்து வருகிற காரணத்தினால், மொழி வெறி கொண்டலைகிறது என்ற குற்றச்சாட்டிற்கு உள்ளாக்கப்படுவதிலிருந்து உத்திர பிரதேசம் தப்பித்துக்கொள்ளுகிறது. அத்தகு வாய்ப்பு மற்ற மொழி வழி கோரிக்கையினருக்கு இயல்பாகவே இல்லாமல் போய்விட்டது. எனவே, மொழி வெறி கொண்டு அலைகிறார்கள் என்ற அபவாதத்திற்குள்ளாகி மற்ற மொழியினர் திண்டாடித் தத்தளிக்கின்றனர்.

மொழித்துறை ஒன்றில் மட்டுமேயல்லாது, துறைகள் அனைத்திலும் உத்திர பிரதேசத்தின் ஆதிக்கம்தான் இந்தியப் பேரரசு மூலமாகச் செயல்பட்டு வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வுண்மையை ஒவ்வொரு மாகாணமும், ஆளும் காங்கிரஸ் கட்சி உட்பட அறிந்தே இருக்கிறது.

மொழிவழி கோரிக்கைகளினால் ஏற்பட்டுள்ள மனமாச்சரியத்தைப் போக்குவது என்ற பெயரில், ஒரு புதிய அரசியல் ஏற்பாட்டை இந்தியப் பிரதமர் மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

அந்த ஏற்பாடு மிகச் சாதாரணமான ஏற்பாடு போலத்தான் உருவத்தில் காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறது. அதை நுணுகி ஆராய்ந்தால், அதில் மறைந்துகிடக்கும் பேராபத்தை மிகத் தெளிவாக, சாதாரண அறிவு படைத்தவர்களாலும் தெரிந்துகொள்வது சாத்தியமாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தை ஐந்து அல்லது ஆறு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியின் கீழும் அப்பகுதியில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களை இணைத்து, அத்தகைய ஒவ்வொரு இணைப்புக்கும் ஒவ்வொரு அறிவொளி மன்றத்தை ஏற்படுத்துவது. அந்த அறிவொளி மன்றங்களை இந்தியப் பேரரசின் கீழ் கொண்டுவருவது.

இப்பொழுது அந்த அறிவொளி மன்றங்கள், அதனதன் அரவணைப்பில் உள்ள மாகாணங்களின் பொது பொருளாதார நலத்தைப் பேணி வளர்ப்பது. காலப்போக்கில் ஒவ்வொரு அறிவொளி மன்றத்திற்கும் ஒரு உயர்நீதி மன்றமும், ஒரு கவர்னரும் எனும் வகையில் ஏற்படுத்திக்கொள்வது; இதுதான் இந்தியப் பிரதமரின் புதிய ஏற்பாடு.

மொழிவழி பிரச்சினையினால் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் மனத் தாங்கலைத் தணிக்க இந்த அறிவொளி மன்றங்கள் தேவைப்படுகின்றன என இந்தியப் பிரதமர் கூறுகிறார். அவர் கூறுகிறபடி, மொழி பற்றி ஏற்பட்டுள்ள மனக் கசப்பைப் போக்குவதுடன் அறிவொளி மன்றங்கள் முடிந்துவிடுமா என்றால், அதுதான் இல்லை; அதன் பிறகும், அறிவொளி மன்றங்கள் இருக்கத்தான் இருக்கும்.

அப்படி நீடித்து உயிர் வாழ்கிற அறிவொளி மன்றங்களின் பணி என்ன? ஒரு பொது கவர்னரையும், ஒரு பொது உயர் நீதிமன்றத்தையும் ஏற்படுத்திக்கொண்டு, புதிய பணியில் பிரவேசிக்கும்.

என்ன அப்பணி? அப்பணியினால் மாகாணங்களுக்குள்ள அதிகாரங்கள் கூடுமா—குறையுமா?

மொழிப் பற்றினால் ஏற்பட்ட 'குறுகிய மனப் போக்கை'ப் போக்கி விரிந்தமனப்போக்கை உருவாக்க வந்த அறிவொளி மன்றங்கள், காலப்போக்கில், மாகாண அதிகாரங்களை மெள்ள மெள்ள ஒன்றன் பின் ஒன்றாக விழுங்கி ஏப்பமிட்டு, இறுதியில் மாகாண அமைப்பையே உருத்தெரியாமல் மென்று தின்று செரிமானம் செய்து விடுவதில் வந்து நிற்கும்.

இந்தத் தற்கொலை ஏற்பாட்டை நமது முதலமைச்சர் கனம் காமராசர் வரவேற்கிறாராம்! ஏன் வரவேற்கமாட்டார்?

மொழிவழி மாநிலம் கேட்பது, ஜனநாயக வளர்ச்சிக்கு வித்து போன்றதாகும். ஆட்சி முறையின் உள்ளடக்கத்தை உரிமையுடைய தாய்மொழியில் ஒருவரால் புரிந்துகொள்ள முடிகிற அளவுக்கு, அன்னிய மொழியும் இந்தியப் பிரதமரின் சொந்த மொழியும் ஆன இந்தி மொழியால் புரிந்துகொள்வது கடினம். குறிப்பிட்ட ஒரு அரசாங்கத்தின் மொழியாக ஒரு மொழி ஒப்புக்கொள்ளப்படாத வரையில், கோடிப் பொன் கொட்டி அழுதாலும் ஒரு மொழி வளம் பெற்றுவிடாது. மொழிபற்றி உள்ள இந்த அரிச்சுவடியை கனம் காமராசர், முதலமைச்சர் என்ற அதிகாரத்தாலும் மறைக்கவோ, மறுத்துவிடவோ ஒருக்காலும் முடியாது.

ஆந்திர உயர் நீதிமன்றம் ஒழிக்கப்பட்டு, தமிழ்நாடு உயர் நீதிமன்றம் உருக்குலைக்கப்பட்டு, கன்னட உயர் நீதிமன்றம் அகற்றப்பட்டு, மலையாள உயர் நீதிமன்றம் உடைத்தெறியப்பட்டு, அம்மொழி மாகாணங்கள் இணைந்துள்ள அறிவொளி மன்றத்தில் ஒரே ஒரு உயர் நீதிமன்றம் செயல்படத் துவங்கினால், தமிழ் மொழிதான் தலை எடுக்குமா? ஆந்திர மொழிதான் ஆட்சி புரியுமா? மலையாள மொழிதான் மன்றம் ஏறுமா? கன்னட மொழிதான் காட்சி தருமா?

திராவிட இன மொழிகள் சிறப்பிழக்கும்—சீரழியும்! தொட்டிலாட்டிலும், ஏட்டிலும், புலவர் பாராட்டிலும் போய் ஒளிந்துக் கொள்ளும்!

அறங்கூறு மன்றத்திலும், நாடாளும் அவையிலும் கொலுவீற்றிருக்க முடியாது. தமிழ், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் நான்கிற்கும், பல்கலைக் கழகம் நுழைய வேண்டிய அவசியமே கிடையாது. இன்றுள்ள நிலையிலும் கீழ் நிலைக்குச் சென்றுவிடும் திராவிட இன மொழிகள்!

இந்தியப் பிரதமர் சிருஷ்டியான அறிவொளி மன்ற ஏற்பாட்டிற்கு, மொழியை முதலில் பலியிட்டு, அதன் பின்னர் ஒவ்வொரு நல்லியல்களையும் அடகு வைத்து, முடிவில் மாகாண ஆட்சியையே இழந்துத் தவிக்கவேண்டும்.

இது ஜனநாயகம் அல்ல; இந்தியப் பிரதமரின் ஏதேச்சாதிகாரம்!

அறிவொளி மன்றங்களாகத் துவங்கி இறுதியில் ஆதிக்க மண்டலங்களாக முடிவுறும்! இதுவே நேருவின் புதிய அரசியல் ஏற்பாடு!

இருதய நோய்களுக்கு சிகிச்சை முறை

'எக்ஸ்ரே'யில், இருதயத்திலுள்ள குழாய்கள் நன்கு தெரியச் செய்யும் ஓர் புதிய ஊசிபோடும் முறையின் அபிவிருத்தி பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித இருதய நோய்களைத் தெரிந்துகொள்வதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும், இப்புதிய முறை உதவியளிக்குமென விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றனர்.

மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி பயில வசதி!

சிங்கப்பூர், டிச. 23—

"மலாயா பல்கலைக் கழகத்தில் 'இந்திய'க் கல்விக்கான பிரிவு ஒன்று அடுத்த அக்டோபர் திங்களுக்குள் துவக்கப்பட்டுவிடும்," என்று, துணைவேந்தரான சர் சிட்னி கெய்ன் என்பார் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

தமிழ் மொழி பயிலுவதற்கான வசதியுடன் முதலில் பிரிவு துவக்கும் என்றும், பின்னர் தேவையானால் இதர இந்திய மொழிகள் கற்பதற்கும் வசதிகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'பஜனை மடங்களால் ஒழுக்கம் வளர்ந்ததுண்டா?'

'குறள் நெறியன்றிச் சிறந்த வாழ்வு நெறி எது?'

சென்னைக் கூட்டத்தில் அன்பழகன்

"இந்த நாட்டில் பஜனைக்கூடங்களினால் ஒழுக்கம் உயர்ந்தது என்று சொல்ல முடியுமா? மடங்களினால் பண்பு வளர்ந்தது என்று சொல்ல முடியுமா? பக்தர்களை நான் கேட்கிறேன்— நீ பாரதத்தைப் படிக்கின்றபோதே, ஐந்து பேருக்கு மனைவியானள் திரௌபதி என்று கற்பிழந்தவளை—ஒழுக்கம் கெட்டவளைப் பற்றித்தானே படிக்கிறாய்? பின் எப்படி வளரும் பண்பு? பக்தி, இந்த நாட்டில், இழிந்த ஒழுக்கங்களைக் கற்பித்தது; பகுத்தறிவு பேசுகின்றவர்களால்தான் ஒழுக்கம் கெட்டது—என்கிறார்கள் மதவாதிகள்; பெரியார் பிறக்காத முன்பு கொலை, கொள்ளை நடக்காமலா இருந்தது; விபசாரம் இல்லாமலா இருந்தது; வேற்றுமை இல்லாமலா இருந்தது; திருட்டு இல்லாமலா இருந்தது? நாயன்மார் பிறக்காத காலம், நால்வர் நடமாடாத காலம் இராமானுசர், சங்கராச்சாரியார் பிறக்காத பழங்காலம்; அந்தச் சங்ககாலம் நல்ல ஒழுக்கமுள்ள காலமாக இருந்ததேயன்றி—இடைக்காலத்தில் ஒழுக்கம் இருந்ததா?"

—என்று, 17—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை, புதுவண்ணை வள்ளுவர் இளைஞர் மன்றத் துவக்க விழாவில் அன்பழகன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தோழர் ம. சண்முகம் எம். எல். ஏ., தலைமை தாங்கினார்.

தோழர் இராதாமாணிக்கம் இயக்கப் பாடல்கள் பாடினார்.

தோழர்கள் பிரியாதுரை, கோ வெற்றிவீரன், கண்ணதாசன், அன்பழகன் ஆகியோர் பேசினர்.

தோழர் கண்ணதாசன், வள்ளுவர் இளைஞர் மன்றத்தைத் திறந்து வைத்து, திருவள்ளுவரின் கொள்கைகள் இன்று நாடெங்கும் பரப்பப்பட்டு வருவதையும், பொதுமக்கள் பொய்மைப் புலவர்களைப் போற்றுவதைக் கைவிட்டுப் பகுத்தறிவுப் புலவர்களைப் போற்றத் தொடங்கியுள்ளதையும், வள்ளுவர் மன்றம் ஆற்றவேண்டிய பணிகளையும் விளக்கிப் பேசினார்.

தோழர் அன்பழகன் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் துறையிலிருந்த சைவச் சீலர்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். தமிழில் ஆர்வத்துடன் அவர்கள் ஈடுபட்டவர்களே தவிர, வாழும் வாழ்க்கையில் சிறந்திருந்ததாகக் கூற முடியாது. அவர்கள் 'வாழ்க்கை'யில் குறைகளிருப்பினும், 'சிவபக்தி'யில் குறையே இருந்ததில்லை.

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு இளைஞர்கள் இப்படி ஒரு மன்றத்தை, துவக்குவதாயிருந்தால், சேக்கிழார் சங்கமோ, கம்பர் கழகமோ, மாணிக்கவாசகர் மன்றமோ தான் ஏற்படுத்தியிருப்பார்கள். இத்தகைய நல்லறிவு மன்றங்களைத் தோற்றுவித்திருக்கமாட்டார்கள். இதுவரையில் வள்ளுவர் மன்றங்கள் சேர்ந்து ஒன்றுபட்டுப் பாடுபடவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் வள்ளுவரின் இயக்கம் வளரும் என்று எதிர்பார்க்கிறேன். காரணம், இன்று புலவர்கள் அனைவரும் தமிழார்வமுடன் தமிழில் மறுமலர்ச்சி காணத் துடிக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நாம் கம்பனைக் குறை கூறி காலத்தில் நடைமுறைத் தூற்றி. புலவர்கள் கூட இன்று நம் நெறியைப் பின்பற்றுகின்றனர்.

'புலவர்கள் திருப்புகிறார்கள்; இளைஞர்கள் முன்னேறுகிறார்கள் நமது இளைஞர்கள் ஓய்வுயிக்கவர்கள் அல்ல; வசதியுள்ளவர்களல்ல ஆகவே, அவர்களது ஆர்வம் தொடர்ந்து எல்லா நேரத்திலும் பயன் தருவதாக இல்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள்

800 பேர் அமெரிக்காவில் பயிற்சி பெறுவராம்

கராச்சி, டிச 23—

இந்த ஆண்டு, அமெரிக்காவில் சுமார் 800 பாகிஸ்தான் அதிகாரிகள் இராணுவப் பயிற்சி பெறுவர் என்று தெரியவருகிறது. தரைப் படையிலிருந்து 25 பேர், கடற்படையிலிருந்து 60 பேர், விமானப் படையிலிருந்து 500-க்கும் அதிகமானபேர்—என்று, எல்லாப் பிரிவு இராணுவத்தினரும் பயிற்சி பெறுவராம்.

இது, அமெரிக்கா பாகிஸ்தானுக்குச் செய்யவிருக்கும் விரிவான இராணுவ உதவியின் ஒரு பகுதியாக இருக்குமாம்.

இந்தத் தகவலை அமெரிக்க இராணுவத்தின் கூட்டுத் தளபதிகளின் தலைவரான அட்மிரல் ஆர்தர் ராட்போர்டு தெரிவித்திருக்கிறார்.

இங்கு வந்துள்ள அவர், மேலும் 'நான் இங்கு எங்கள் வேலைகளைச் சரிபார்க்க வந்திருக்கிறேன்; சர்க்கார் அதிகாரிகளைச் சந்திக்க விரும்புகிறேன்; எங்கள் பாகிஸ்தானுடன் சுமூகமான உறவு கொள்ள ஆவலாயிருக்கிறோம். பாகிஸ்தானுக்கு நாங்கள் வழங்கும் இராணுவ உதவி குறித்துக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை நிவர்த்திக்க விரும்புகிறோம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சோவியத் தலைவர்களின் ஆசிய சுற்றுப் பயணம் குறித்து கருத்தறிவிக்குமாறு கேட்டபோது, 'அதனை அரசியல் வாதிகளுக்கே விட்டுவிடுகிறேன்' என்று அட்மிரல் ராட்போர்டு பதிலளித்தாராம்.

விழாவில் கலாட்டா!

ஜபல்பூரில் மகாகோசலம் மகாவித்தியாலய ஆண்டு விழாக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, யாரோ சில நபர்கள் மின்சார விளக்குகளை அணைத்துவிட்டு, கூடியிருந்த பெண்கள்மீது சில இரசாயனப் பொருள்களை வீசியதின் விளைவாக எட்டுப் பெண்கள் காயமுற்றனர் என்று வடநாட்டுச் செய்தி ஒன்று கூறுகிறது.

திராவிட இன உணர்வு

அவதியுறும் தமிழருக்கு உதவ கன்னட மக்கள் முன்வருகின்றனர்

பெங்களூர், டிச. 24—

தமிழ்நாட்டில் விளைந்த புயல், வெள்ளச் சேதங்களுக்கு நிவாரணம் திரட்டித் தருவதற்காகக் கன்னடத் தலைநகரான பெங்களூரில், எல்லாக் கட்சியினரும் கொண்ட குழு ஒன்று கடந்த 20-ந் தேதியன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

தோழர் இராமானுசலு அவர்கள் இல்லத்தில் கூடிய சர்வ கட்சி தோழர்களே இதனை அமைத்திருக்கின்றனர்.

குழுவின் கௌரவத் தலைவராக, பெங்களூர் மாவட்ட காங்கிரஸ் கட்சிச் செயலாளரான கே. ஆர். மாதவ ராவ் அவர்களும், தலைவராகப் பெங்களூர் நகர சபைத் தலைவர் வி. பி. தீன தயாளு (நாயுடு) அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மற்றும் தோழர்கள் வி. எஸ் கிருஷ்ணப்பா (காங்), வி. ஆர். நாயுடு எம். எல். ஏ. (காங்), எம். எஸ் கிருஷ்ணன் (கம்). எஸ். பி. அடைக்கல் (சோஷ), டி டி அரசு (திராவிடர் கழகம்); எஸ் வி. பதி (தி மு. கழகம்) ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், தோழர்கள் ஜி. வி. செல்லம், எம் பழனிவேல் ஆகியோர் பொருளாளர்களாகவும், தோழர் வி இராமானுசலு பொதுச் செயலாளராகவும், தோழர்கள் கே. கோவிந்தராஜ் (சோஷ), ஏ என். சிங் (கம்), எம். ஜெபராம் (தி. க) ஏ. டி. பிரான்சிஸ் (தி மு. க) எஸ். ஜெபராம் ஆகியோர் செயலாளர்களாகவும், மற்றும் பத்து நிர்வாக செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

குழுவினர் சகல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் என்பதால், தமிழக மக்கள் தங்களது சோதரர்களான—உறவினர்களான கன்னட மக்களிடமிருந்து கணிசமான உதவி எதிர்பார்க்கலாம் என்று, குழுவின் துணைத் தலைவர்களுள் ஒருவர் அறிவித்திருக்கிறார்.

பம்பாயில் நிவாரண நிதி வசூல்

கழகத் தோழர்களின் கூட்டு முயற்சி

"அண்மையில் திராவிடத்திலேற்பட்ட கொடும் புயலினால் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டத்து மக்களின் நிலைகுறித்து, பம்பாய், ஆமதாபாத் போன்ற வடநாட்டில் வாழுகின்ற திராவிடப் பெருங்குடியினர் கொள்ளும் துயரத்திற்கு எல்லையே கிடையாது.

"பம்பாய், ஆமதாபாத் ஆகிய பகுதிகளிலுள்ள தி மு. கழகக் கிளைகள். தாயகத்தினரின் துயர் தீர்க்கும் நல்லெண்ணத்துடன் பிற அமைப்புகளுடன் கலந்தும், தனித்தும் சிறப்புறச் செயல் புரிகிறதென்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"தாராவி பகுதியிலுள்ள ஜனநாயக வாலிபர் சங்கம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி போன்ற 15 அரசியல், சமுதாய அமைப்புகளுடன் தோழர் ப த. முத்துசாமி தலைமையில் தி மு. கழகம் இணைந்து செயல்புரிந்து வருகிறது

"மாதுங்கா கிளைக் கழகத் தோழர்கள் தோழர் என். பெருமாள் தலைமையில் நிதிக் குழு அமைத்துப் பணிபுரிந்து வருகின்றனர்.

"பாண்டுப்—காந்திவ்லி போன்ற பகுதிகளிலுள்ள கழகக் கிளைகளின் சார்பிலும் புயல் நிவாரண நிதி வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன

"ஆமதாபாத் நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. தணிகாசலம் பிற அமைப்புக்களையும் இணைத்து நிதி வசூலுக்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

"பம்பாய்வாழ் பொதுமக்கள் நிதிக் குழுவினர் வசூலுக்கு வருகின்றபொழுது உள்ளமுவந்து இயன்றதை ஈந்துத் தாயகத்தாரின் துயர் துடைப்பதற்கு ஆவன செய்யுமாறு மிக்கப் பணிவன்போடு வேண்டிக்கொள்ளுகிறோம்,"

என்று, பம்பாய் மாவட்டத் தி மு கழகச் செயலாளர் தோழர் த. மு பொற்கோ தமிழகப் புயல்—வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தவருக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

சென்னை-12-வது வட்டம்

சென்னை 12-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில், 17-12-55 காலை 10 மணிக்கு புயல் நிவாரண நிதி திரட்டும் பணியில் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு, வட்டத்தின் முக்கியத் தெருக்களில் சென்று ரூ. 15 வசூலித்தனர்.

சென்னை—13-வது வட்ட தி. மு. கழகம்

சென்னை 13-வது வட்டக் கிளையின் சார்பில், கிளைக் கழக உறுப்பினர்கள் 18—12—55-ல் தெருக்கள் தோறும் சென்று ரூ. 57–10–6-ம், 380 துணிகளும், 15 படி அரிசியும் வசூல் செய்து மாவட்டக் கழகத்தவரிடம் ஒப்படைத்தனர்.

ஆலந்தூர்

14—12—55ல், ஆலந்தூரில், அவ்வூர் தமிழகப் புயல் நிவாரணக் குழுவினர், நிவாரண நிதியாக ரூ 101 திரட்டி, அரசியலாருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

திருப்புத்தூர்

மூவேந்தர் கலை மன்றத் தோழர்கள் 11. 18-12-55 நாட்களில் அரிசி $65\frac{1}{2}$-படியும் ஒரு 4-முழ வேட்டியும், பழைய சட்டைகள் இரண்டும், ரூ. 13-2-0 ரொக்கமும் திரட்டினர். வேட்டியை ஏலத்தில் விட்டதில் ரூ. 1-8-0 கிடைத்தது. 21-12-55ல், பர்மாவிலிருந்து வந்த அகதிகளான ஒரு பெண்—இரு குழந்தைகள் ஆக மூன்று பேருக்கும் மன்றத்தின் சார்பில் $5\frac{1}{2}$-படி அரிசி வழங்கப்பட்டது. மீதி அரிசி 60-படியும் சமைத்து 600-க்கு மேற்பட்ட பின்தங்கிய வகுப்பினருக்கும் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இரு மலேயா தமிழ்த் தினசரிகள் நிதி உதவி

சிங்கப்பூர் 'தமிழ் முரசு' என்ற தின இதழ், இதுவரையில் ரூ. 30,000 நிதி திரட்டி அனுப்பியுள்ளது.

கோலாலம்பூர் 'தமிழ் நேசன்' என்ற தின இதழ், இதுவரையில் 58,000 வெள்ளி திரட்டி அனுப்பியுள்ளது. (ஒரு வெள்ளி ரூ. $1\frac{1}{2}$-க்குச் சமமாகும்.)

கழகச் செய்திகள்

மதுரை மாவட்ட தி. மு. கழகம்

செயற்குழு முடிவுகள்

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 15—12—55 பிற்பகல் 3 மணிக்கு நிலக்கோட்டையில் மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து தலைமையிலும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

அதுபோது பேராசிரியர் இருதயராஜ் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் புயலாலும் — வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டும், தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில் உள்ள தேவிகுளம், பீர்மேடு, செய்யாறறங்கரை, சித்தூர் ஆகிய தமிழ்த் தாலுகாக்களையும், தமிழகத்தின் வடக்குப் பகுதிகளில் உள்ள திருத்தணி, நகரி. புத்தூர், சித்தூர் ஆகிய தமிழ்ப் பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்கவேண்டுமென்று இந்தியப் பேரரசினையும், சென்னை மாநில அரசினையும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும், மதுரை மாவட்டத்தில் ஆங்காங்குள்ள கிளைக் கழகங்கள் உணவு, உடை, பொருள் ஆகியவற்றைப் புயல் நிவாரண நிதியாகத் திரட்டி மதுரை மாவட்டக் கழக நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் பி சமதர்மம் அவர்களை ஏகமனதாகப் பொதுக் குழு உறுப்பினராக தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர், பொதுச் செயலாளர் அவர்கள் கழக ஆக்கவேலை பற்றியும் உறுப்பினர் சேர்க்கும் முறை பற்றியும் அறிவுரையாற்றினர்.

சென்னை—12-வது வட்ட தி. மு. கழகம்

10—12—55 காலை 10 மணிக்கு சென்னை 12-வது வட்ட தி. மு. கழகக் கிளைச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, முன்னாள் செயலாளர் தோழர் எஸ். செல்வராஜ், துணைச் செயலாளர் ஆகியோரின் விலகல் மடல்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், அன்னாரின் சேவையைப் பாராட்டியும், செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள் கே ஏ. கண்ணபிரான், ஏகாம்பரம், டி. கோதண்டராமன் ஆகியோரது விலகல் மடல்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பின்னர், தோழர்கள் நெல்லை-அரசு, இரா. வில்லாளன், பி. எஸ் மணி, இளங்கார்வண்ணன், எஸ். முனுசாமி, இறைஒளி, ராசன், தமிழழகன், ரா. வளவன், செல்லம், பிச்சை, அழகரசு ஆகிய 12 பேர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய செயலாளராகத் தோழர் நெல்லை-அரசு, துணைச் செயலாளராகத் தோழர் அழகரசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அக்காமலை எஸ்டேட் தி. மு. கழகம்

19–12–55 இரவு $10\frac{1}{2}$ மணிக்கு அக்காமலை எஸ்டேட் தி. மு கழக கிளையின் சார்பில் தோழர் தா. க. அருணாசலம் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர் ஆ க. வேலவன் 'அரசியல் பண்பு' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், நிவாரண நிதி திரட்டும் பொருட்டு தோழர் டி. எஸ். மணி தலைமையில் ஒரு குழு நியமிப்பதெனவும், 1—1—56ல் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பெங்களூர்—பெரியார் இராமசாமி நகர் தி. மா. மு. கழகத் துவக்கம்

18—12—55-ல், காலை 10-30 மணியளவில், தோழர் இளஞ்சேரன் தலைமையில் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் பலர் மாணவர் கழகத்தின் குறிக்கோளை விளக்கிப் பேசினர்.

பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு. சி. நெடுமாறன்; துணைச் செயலாளர் இ சந்தர்; பொருளாளர்: மு. சுவாமிநாதன்.

* * *

கோலார் தங்கவயலில் தி. மா. மு. க. துவக்கம்

21-12-55 மாலை 5-30 மணிக்கு தோழர் துரைராசன் தலைமையில் 25-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒன்றுகூடி தேர்தல் நடத்தி, கீழ்க்கண்ட செயற்குழுவை அமைத்தனர்:—செயலாளர்: ஜே இளஞ்செழியன்; துணைச்செயலாளர்: அ. துரைராசன்; பொருளாளர்: வி தமிழரசன்; செயற்குழு உறுப்பினர்கள்: இளங்கோவன், சந்திரசேகரன், முத்துமாணிக்கம், இராஜாராம், தர்மலிங்கம், சிதம்பரம், ஜெயவீரன்.

இராமானுசம்புதூர் ஆதிதிராவிட நல உரிமைச் சங்கம்

11—12—55 இரவு 8 மணிக்கு, நெல்லை மாவட்டம் இராமானுசம்புதூர் ஆதிதிராவிட நலவுரிமைச் சங்கம் பம்பாய்க் கிளையின் மாதாந்திரக் கூட்டம், பம்பாய் - தாராவி க. வ. வி. சங்க அறையில் தோழர் சு வானமாமலை தலைமையில் நடைபெற்றபோது தாய்ச் சங்க நிறுவனம், பள்ளிக்கூட சீரமைப்பு, சங்கத்துக்கென ஒரு பணிமனை நிறுவுவது பற்றி முடிவுகள் சில செய்யப்பட்டன.

'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்புகள்

அண்ணா அவர்களது சேலம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின் போது அளிக்கப்பட்ட 'நம் நாடு' இதழ் நன்கொடை ரூ. 6–15–3-ம் கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொண்டோம்—நன்றி — பொறுப்பாளர்.

22—11—55ல், காளப்பநாய்க்கன்பட்டி தோழர் ஒருவர் தன் குழந்தைக்குப் பெயர் சூட்டியதின் நினைவாக ரூ. 1;

23—11—55ல், நீர் முள்ளிக்குட்டை பொதுக்கூட்டத்தில் தோழர் பாண்டியன் மூலம் ரூ 0—15—3;

மல்லியக்கரை பொதுக்கூட்டத்தில் தோழர் டி. இருசப்பன் ஆண் குழந்தைக்கு 'இளம்வழுதி' என்று பெயர் சூட்டியதின் நினைவாக ரூ. 1;

பேளூரில் இயக்க அனுதாபிகள் சார்பில் அண்ணா அவர்களுக்கு அணிவிக்கப்பட்ட காசு மாலை மூலம் ரூ. 2—8—0;

ஆணையாம்பட்டி பொதுக்கூட்டத்தில் தோழர் ஒருவரின் குழந்தைக்குப் பெயர் சூட்டியதின் நினைவாக ரூ. 1;

ஆணையாம்பட்டியில் மற்றொரு தோழர் குழந்தைக்குப் பெயர் சூட்டியதின் நினைவாக ரூ. 0–8–0

பிறப்பு

சென்னை 13-வது வட்ட செயற்குழு உறுப்பினர் தோழர் பழம்நீ அவர்கள் துணைவியார் 2–12–55ல் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

* * *

18–12–55ல், வேலூர் (சேலம்) தி. மு. கழகத் தோழர் இராமநாதன் துணைவியார் பெண் மகவொன்றுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம்.

செய்திச் சுருள்

லால்குடி நடராசன் நினைவு படிப்பகம்

18—12—55ல், ஆரப்பாளையம் லால்குடி நடராசன் நினைவுப் படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் செ. மனோகரன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் இரா சு. செல்லம், வி. பானு, ஆர். எஸ் எஸ். மணி, மாற்பநியன், மு. மணிச்செல்வன் ஆகியோர் பொங்கல் விழா பற்றிப் பேசினர். பொங்கல் விழாக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. பின்னர், தமிழ் நாட்டில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை அழகிரி நினைவுப் படிப்பகம்

18-12-55 காலை 10-மணிக்கு மேற்படி படிப்பகச் சொற்பயிற்சி மன்றக் கூட்டம் தோழர் எம் கருப்புச்சாமி தலைமையில் நடைபெற்றபோது திரைப்படக் காட்சியால் ஏற்படும் நன்மை-தீமைகள் குறித்துத் தோழர்கள் பலர் பேசினர்.

கும்பகோணம் மின்சாரம் உபயோகிப்போர் சங்கம்

18—12—55 காலை கும்பகோணம் நகர வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில், தோழர் டி. சம்பத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மின்சார விநியோகக் கார்ப்பொரேஷன், சென்ற வருட முதல் உயர்த்திய 'மீட்டர்' வாடகை உயர்வை ரத்து செய்யவும், பொது உபயோக மின்சாரக் கட்டண விகிதத்தைக் குறைக்கவும், 'எனர்ஜி' கட்டணத்திற்கு வட்டி வசூலிப்பதை ரத்துச் செய்யவும், குறைந்தபட்சக் கட்டணத்தைக் குறைக்கவும், விசேட காலங்களில் அடிக்கடி விளக்குகள் அணைவதைத் தடுக்கவும், மின்சார விநியோகம் சம்பந்தப்பட்ட இதரக் குறைகள் நீக்கப்படவும், 'கும்பகோணம் மின்சாரம் உபயோகிப்பவர்களின் சங்கம்' அமைக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்தும், தலைவரும், தோழர்கள் பலரும் சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர் எஸ். ஆரோக்கியசாமியைத் தலைவராகக் கொண்ட மேற்படி சங்கம் அமைக்கப்பட்டது. சங்கத்தின் சட்ட திட்டங்களைத் தயாரிக்க ஐவரைக்கொண்ட உபகுழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

வேலப்பாடி இளைஞர் தி. மு. கழகம்

18—12—55 பகல் 2 மணிக்கு தோழர் கரிகாலன் இல்லத்தில் தோழர் மா. பா. சாரதி தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டும், கோவை, சென்னை பி. அண்டு. சி போன்ற ஆலைத் தொழிலாளர்கள் போல், மற்ற அரசாங்க ஊழியர்களும் புயல் நிவாரண நிதிக்குத் தங்களது ஒரு நாள் ஊதியத்தைக் கொடுத்துதவுமாறு கேட்டுக்கொண்டும், கிளையின் சார்பில் பொங்கல் விழாவைச் சிறப்புறக் கொண்டாடுவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடவுள் பெயரால் சத்தியம் செய்ய மறுத்தவர்

வடநாட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்ருர்

ஆமதாபாத், டிச. 23—

மங்கார்பேச்சார் என்ற பெயருடைய கிராமப் பால்காரர் ஒருவருக்கு, கடவுளின் பெயரால் அவர் சத்தியம் செய்ய மறுத்தார் என்ற காரணத்துக்காக ஆமதாபாத் நீதிப் பிரிவு மாஜிஸ்திரேட்டால் ரூ. 75 அபராதம் அல்லது 15 நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

திருட்டு வழக்கொன்றில் சாட்சியாக வந்த அவர், இந்தப் பிரச்னையில் கடவுளின் பெயரை இழுப்பது சரியல்லவென்றும், கடவுளின் பெயரால் தாம் சத்தியம் செய்ய இயலாது என்றும் அவர் கூறினராம்.

இவ்வாறுமறுப்பது, கோர்ட்டை அவமதித்தக் குற்றமாகும் என்று மாஜிஸ்திரேட் கூறினராம்.

என்ருலும், அந்தப் பால்காரர், தண்டனையை ஏற்றுக்கொண்டு, அபராதத் தொகையைச் செலுத்தி விட்டு வெளியேறினராம்.

பெரியாருக்கு அன்பளிப்பு

ரூ. 23,000 பெறுமான பிரச்சார வண்டி தரப்பட்டது

சென்னை, டிச. 25—

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கட்கு நேற்று மாலை பெரம்பூர் காண்ஸ்மித் நகர் மைதானத்தில் திராவிடக் கழகத் தோழர்களால், ஒரு 'டாட்ஜ்' பிரச்சார வண்டியும், ஒரு 'பேச்சுப் பதிவு'ப் பெட்டியும் அன்பளிப்பாகத் தரப்பட்டன.

ரூ. 23 000 செலவில் தயாரிக்கப்பட்ட அந்த வண்டி, ஒரு சிறு வீடு போல சில குறைந்தபட்ச வசதிகளுடன் அமைந்திருக்கிறது.

இந்தப் பிரச்சார வண்டி அன்பளிப்பு விழாவிற்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்தனர்.

அணுக் கதிரால் நச்சுப்பெறும் நீர்!

30 நிமிடங்களில் சுத்தம் செய்யும் புதிய ஆயுதம்

அணு குண்டு வெடிப்பதால் ஏற்படும் ரேடியக் கதிர்கள் பரவி நச்சுத் தன்மையடையும் தண்ணீரை 30 நிமிடங்களுக்குள் சுத்தம் செய்துவிடக் கூடிய சாதனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாம்; நீரையொட்டி அச்சாதனம் செல்லும்போதே சுத்தமாகிவிடும். அத்தண்ணீரை ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே பருகியுள்ளனராம்.

உயிர்ப் பலி தடுப்புச் சட்ட நிர்வாகம்

சென்னை சர்க்கார் உத்தரவு

சென்னை, டிச. 25—

1860-ம் வருடத்திய—சென்னை விலங்குகள், பறவைகள் பலி தடுப்புச் சட்ட நிர்வாகத்தை, உடனடியாக இந்துமத பரிபாலன இலாகா கமிஷனர் வசம் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்.

அந்தமான்—நிக்கோபார் தீவுகளில் தற்போது 31 ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், இரண்டு மத்தியதரப் பள்ளிக்கூடங்களும், ஒரு உயர்தரப் பள்ளிக்கூடமும் இருக்கின்றன.

'ரூ.30-இலட்சம் வேண்டும்'

'அறிவிக்கப்பட்டுள்ள அன்பளிப்பு மருத்துவ மனை நிறுவுவதற்குப் போதுமானதல்ல'

சென்னை, டிச. 23—

'வியட்நாமில் வணிகம் நடத்தும் செல்வந்தரான அப்துல் அஜீஸ் என்பார், தமது சொந்த ஊரான சென்னையில் 100 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவ மனையும், ஒரு ஆரம்பப்பள்ளியும் கட்டுவதற்கென ரூ 4½ இலட்சம் வழங்கியது வரவேற்கப்படவேண்டியதே' என்று சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறியிருக்கிருர்.

அன்பளிப்பு பற்றி தனக்கு அதிகார பூர்வமாகத் தகவல் ஏதும் இல்லை என்றும், ஆனல் அளிக்கப்பட்டுள்ள தொகை மருத்துவ மனை அமைக்க போதுமானதல்லவென்றும், குறைந்தது ரூ 30 இலட்சமாவது வேண்டும் என்றும், மேலும் பலர் நன்கொடை வழங்கவேண்டுவது அவசியம் என்றும், மிகப் பெரும் செல்வந்தர் என்று கூறப்படும் அப்துல் அஜீஸ் இன்னும் சிறிது அதிகமாக அன்பளிப்புத் தர முடியும் என்று தான் நம்புவதாயும் அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிருர்.

உடல் வலிவு மிக்கப் பிச்சைக்காரர்கள்

விவசாயப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்

சென்னை, டிச. 25—

தற்போது சென்னை ஆவடியிலுள்ள சர்க்கார் பிச்சைக்கார விடுதியிலிருக்கும் உடல் வலிவு மிக்கப் பிச்சைக்காரர்கள், விடுதிக்குப் பக்கத்திலுள்ள சர்க்கார் நிலத்தில் விவசாயப் பணித் துறையில் ஈடுபடுத்தப்படுவார்களாம்.

சர்க்கார் தொழிற்சாலைகளில் பணி புரிவோருக்குப் 'போனஸ்'

சீக்கிரமே முடிவு செய்வார்களாம்

"சர்க்கார் நடத்தும் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குப் 'போனஸ்' வழங்குவது பற்றி நடைபெற்றுவரும் பரிசீலனையின் முடிவு சீக்கிரமே தெரியும்," என்று, உற்பத்தித் துறைத் துணை அமைச்சர் சதீஷ் சந்திரா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

2 இலட்சம் பெண்கள் வேலை பெற ரூ. 25 கோடி செலவில் திட்டங்கள்

சென்னை, டிச. 25—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், மத்திய சமூக நலக் கழகம் மேற்கொள்ளவிருக்கிற ரூ. 22·5 கோடி பெறுமான திட்டங்களினல், சுமார் 2 இலட்சம் பெண்களுக்கு வேலை கிடைக்கும்," என்று கழகத்தின் தலைவியான திருமதி துர்காபாய் தேஷ்முக் தெரிவித்திருக்கிருர்.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், மத்திய சமூக நலக் கழகத்தின் பல்வேறு திட்டங்கள் பற்றியும் விளக்கம் தந்திருக்கிருர்.

'சாதிப் பாகுபாட்டினல் தாழ்வு மனப்பான்மை வளருகிறது'

மத்திய சர்க்கார் அமைச்சர் கேஸ்கர் கருத்து

புதுடில்லி—

"ஜாதி வித்தியாசம் இருந்துவருவதால்தான், குறிப்பிட்ட சில வேலைகளைச் செய்வதில் தாழ்வு மனப்பான்மை வளர்ந்துவிட்டது; அந்த மனப்பான்மை, மக்கள் மனதிலிருந்து அகலவேண்டிய நேரம் வந்துவிட்டது.

"பொருளாதார நிலைதான், தீண்டாமைக்கு முக்கியமான காரணமாகும். அதிகம் முன்னேறியுள்ள வகுப்பினர், பிற்போக்கு நிலையில் உள்ளவர்களையும், அதிகம் முன்னேருத மக்களையும் முன்னேற்றுவதற்கு முன் வரவேண்டும்; அதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தினல், சமூகக் கட்டுப்பாடுகள் மறைந்துவிடும்; ஆனல், தீண்டப்படாதவர்களின் பொருளாதார நிலை சீர்திருந்தினல், அவர்களுடைய முன்னேற்றம் துரிதமடையும்.

"ஆதிவாசிகளுடைய பிரச்சினைக்கும், தீண்டப்படாதவர்களுடைய பிரச்சினைகளுக்கும் வித்தியாசமுண்டு. ஆதிவாசிகள இயற்கையோடு ஒத்துவாழ்கின்றனர்; ஒருவிதத்தில் அது மன நிறைவைத் தந்தாலும், கல்வி போன்ற நாகரீக வாழ்க்கையின் பலன்களை அனுபவிக்க அவர்களுக்கும் விருப்பம் இருக்கும்"

—என்று, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைசாதியினர் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக இங்கு நடைபெற்ற விவாத அரங்கில் பேசுகையில், மத்திய சர்க்கார் ஒலிபரப்பு இலாகா அமைச்சர் டாக்டர் பி. வி. கேஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.

கம்யூனிஸ்டுத் தலைவருடன் சந்திப்பு

மலாயா, சிங்கப்பூர் முதன் மந்திரிகள் முடிவு

கோலாலம்பூர், டிச. 25—

மலாயாகம்யூனிஸ்டுத்தலைவரான சின் பெங்கை, மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான், சிங்கப்பூர் முதன் மந்திரி மார்ஷல் டேவிட் ஆகிய இருவரும், சந்தித்துப் பேசுவதென முடிவாகி இருக்கிறதாம்.

சயாம் எல்லையில், கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகள் இருவர்களும், இரு சர்க்காரின் பிரதிநிதிகளும் கூடிப்பேசி இந்தச் சந்திப்பிற்கான முடிவை மேற்கொண்டனராம்.

எங்கு, எப்போது சந்திப்பது என்று முடிவாகியுள்ள விபரங்கள் பாதுகாப்புக் காரணங்களால்வெளியிடப்படமாட்டா என்று கூறப்பட்டிருக்கிறது.

பஜனை மடங்களால் ஒழுக்கம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"நம் இளைஞர்கள் வள்ளுவர் வழியில் நடக்க முன்வர வேண்டும். பத்து ஆண்டுகளுக்குமுன், தமிழனை நோக்கி, 'நீ யார்' என்ருல், 'தமிழன்' என்றுகூடச் சொல்லமாட்டான். இன்ருே, ஓரளவுக்குத் 'திராவிடன்' என்று சொல்லவும் வழி பிறந்திருக்கிறது. வள்ளுவர் வழியை நம் வழி—திராவிடர் வழி என்று கொள்ள வேண்டும்.

"வள்ளுவனைப் போன்று ஒரு புலவன் வாழ்ந்தானு என்ருல், இல்லை. எக்காலத்துக்கும் எவருக்கும் பொருந்தக்கூடிய வாழ்க்கைத் தத்துவத்தை வகையாகத் தந்துள்ளார், வள்ளுவர். மேனுட்டில் தோன்றிய சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள், வாழ்க்கையை விளங்கிக் கொள்ளும் வகையில் எப்படிப் பல கருத்துக்களை வழங்கினரோ அம்முறையில், வள்ளுவர் குறளைத் தந்துள்ளார்.

"'வாழ்வை நம்பாதே,' 'வாழ்வாவது மாயம்' என வேதாந்தம் பேசினர் பலர்; ஆனல் வள்ளுவரோ, 'எதை நம்பலாம்—எதை நம்பக்கூடாது' என்பதை வரையறுத்துக் கூறுகிருர். வாழ்வை நம்பாதவரல்ல வள்ளுவர்.

'வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று வாழ்வை நிலைநாட்டுகிருர் திருவள்ளுவர். வாழ்க்கையைப் போற்றி நன்ருக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இல்லறத்தைச் சிறப்பிக்கின்ருர்.

"துறவுக் கோலத்தைப் போற்றவில்லை அவர்; வாழ வேண்டிய முறையில் வாழ வேண்டியதே தமிழர் முறை; வள்ளுவரின் வாக்கைக் கொண்டு பார்த்தோமானல், ஒழுக்கத்தோடு குடும்பம் நடத்துவதுதான் சிறந்த நெறியாகும். 'பிறன் பழிப்பது இல்லாமல் இருக்குமானல் அதைவிட உலகத்திலேயே சிறந்தது வேறு இல்லை' என்று வள்ளுவர் கூறுகிருர்.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய வள்ளுவரை இன்றுவரை நன்ருகத் தமிழகம் புரிந்து கொள்ளவுமில்லை — போற்றவுமில்லை.

"தமிழகத்திலிருந்த புலவர்களுக்கெல்லாம் சமயவெறி இருந்ததே தவிர, சண்டைகள் போடத் தெரிந்ததே தவிர, பொது மக்களைப் பற்றிய அக்கரையே இல்லை; கம்பர், சேக்கிழார் போன்றவர்களுக்கு சமயவெறி இருந்தது; எனவே, பொது மக்களின் வாழ்வைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

"புராணப் புலவர்கள் பலரும் ஏதோ இன்ப நுகர்ச்சியிலேயே ஆழ்ந்து—அதை வருணித்து எழுதி வைத்தனரேயன்றி மனிதப் பண்பையோ, நல்லொழுக்கத்தையோ, கடமையையோ பற்றி எழுதிவைக்கவில்லை.

"இருபதாம் நூற்ருண்டில் வாழ்கிற நாமாவது குறளைப் போற்றிப் படிக்கிருேமா?—எண்ணி எண்ணி வேதனைப்பட வேண்டியதாக இருக்கிறது.

"இந்த நாட்டில், திருக்குறளையே சிறந்ததாகப் போற்றுகிறவர்கள் யார்? தமிழனுக்குப் பிறந்தவனுக்குத் திருக்குறளுக்குஈடான ஒரு நூல வேறு இல்லை! எந்த மதமும் திருக்குறளுக்கு ஈடாகாது! எந்தத் தமிழ் இலக்கியமும் குறளுக்கு ஈடாகாது! 'கம்ப இராமாயண'த்தில் கருத்து ஆழத்தைக் காண முடியாது. அதைச் சுலபமாக மொழி பெயர்த்துவிடலாம். திருவள்ளுவரின் குறளை, இரண்டு வரியிலுள்ளதை ஏடு வரியில் எழுத வேண்டியிருக்கிறது. பிறமொழியில் எழுதப் புகுந்தால் இரண்டு வரிக்கு பல வரிகள் தேவைப்படும். நுண்மையான கருத்தைப் புலவர் சொல்வதைப் போல மற்றவர்களால் எழுதிவிட முடியாது.

"மனிதனை மனிதனுக்குவதற்கு நூல் உண்டெனில், அது திருக்குறள்தான்! நம் நாட்டு மக்களுக்கு வழிகாட்டும் நூல்! அதனைப் பின்பற்றுகின்றவனே நல்ல தமிழன்! அதை உள்ளன்போடு போற்றுகின்றவன்தான் திராவிட நாட்டிற்குத் தொண்டுபுரியக்கூடும்!

"எனவே, திருக்குறளைப் போற்றுவது நம் தலையாய கடமை! சாதியற்றச் சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு—உரிமையுள்ள நம் நாட்டைப் பெறுவதற்கு நாம் திருக்குறளைப் பரப்பவேண்டும்! எனவே, திருக்குறளைப் பரப்புங்கள்! திராவிடத்திற்குத் தொண்டாற்றுங்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம் ஏ

பண்டித நேருவின் எதேச்சாதிகாரம்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலம் முழுவதில் இரண்டு மொழிகளில் இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட அயல் மொழி பேசப்படும் பகுதியிலேனும் அந்த மொழியில் நிர்வாகம் நடத்த முடியும்—வேலைகளைச் செய்ய முடியும் என்று கருதுகிறேன்.

"மண்டல சபைகள் அமைக்க வேண்டும் என்று நான் கூறுவதற்குக் காரணம், இப்போது இந்தியாவில் தலை தூக்கியிருக்கும் மொழிவெறி, மாநில வெறி இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்குத் தான்.

"எனவே மாநிலப் புனரமைப்பு பற்றி மக்கள் சபை எந்த ஒரு இறுதி முடிவை மேற்கொண்டாலும், இந்த மண்டல சபைகள் அமைவது, அந்த முடிவின் ஒரு பகுதியாக இருக்கப்போவது நிச்சயம்."

மேலும் பேசுகையில் பண்டிதர் சொன்னர்:—

"மொழிவெறி மற்றும் இதர குழப்பமுண்டாக்கும் பிரிவினை வெறிகளிலிருந்து இந்தியாவின் 'ஒற்றுமை'யைக் காப்பாற்றுங்கள். நாம் இப்போதிருக்கிற நிலையை அடைய இரத்தத்தையும், கண்ணீரையும் சிந்தியிருக்கிறேம்; இதையும், கடந்த எட்டாண்டுக் காலத்தில் நாம் மிகுந்த சிரமத்துடன் தயாரித்ததும், நாளுக்கு நாள் உலகத்தின் கவனத்தையும் புகழையும் ஈர்ப்பதுமான நமது இந்திய அரசியல் அமைப்பை அழிப்பது மிக சுலபமானதாக இருக்கும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

"இந்த இந்திய அரசியல் அமைப்பிற்கு ஊறு தேடுவதும், அதனை அழிப்பதும் நம்மைப் பொறுத்து ஒரு பெரும் அவல முடிவாகவே இருக்கும்," என்றும் ஓலமிட்டிருக்கிருர் — புலம்பியிருக்கிருர்.

1955-56-ம் ஆண்டில், கதர்-கிராமக் கைத்தொழில்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக, இந்திய சர்க்கார், அகில இந்திய கதர்-கிராமக் கைத்தொழில்கள் போர்டுக்கு மானியங்களாக ரூ 5 கோடியும், கடன் தொகைகளாக ரூ 2·5 யும் வழங்கியிருக்கிருர்கள்.